மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ.இரா.கண்ணப்பர்

மலர் 10] பிரமாதீச ஞூ — பங்குனி மீ [இதழ் 5

[170-வது மூலிகை]



சவுரிக்கொடி

[விலை 50-காசு

உ

முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

பங்குனி இதழில்

தொலைபேசி எண் : 728 த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ
முருகா.



பிறவி நோய்க்கு மருந்தே!

பல்லவி

எனக்கென்ன கவலை — என்
ஏந்தல் வராத போதும்
மனக்கோட்டை மீதில் — அவன்
மறையா திருக்கின் றானடீ!

அநுபல்லவி

ஒருநாள் தரிசித்த போதும் — அந்த
உறவே ஒருயுகம் வருமடீ!
மறுநாள் கண்டிடவும் வேண்டுமா? — அவன்
மனமே என்வசம் தானடீ! (எனக்)


தினம்தினம் கண்டால்தான் காதலா? —அவனைத்
தேடி அலைவதும் அன்பா?
மனமும் ஒருகணந்தான் மறக்குமா? — என்றும்
மாதம் நாட்களைத் துறக்குமா? (எனக்)

முருகன் வராவிட்டால் என்ன? — என்
முகமே வாடுதல் இல்லையடீ!
பெருகத் தந்துவிட்டான் எனக்கு
பிறவி நோய்க்கு மருந்தே! (எனக்)

—o—

[புலவர். திருமேனி நாகராசன், காரைக்கால்.]

கார்ட்டூன்:



ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] பிரமாதீச ஹு — பங்குனி மீ மார்ச்-74 [இதழ் 5

தொலைபேசித் தொடர்பினுல் தொல்லைகள்!

மனிதன் வாழைப்பழத்தை உரித்துக் கொடுக்க இயந்திரம் ஒன்று வந்திருக்கிறது என்ருல்; உடனே அதை வாங்கிக்கொள்ள முந்திக்கொண்டு ஓடும் நிலை இன்று நிலவி வருகிறது. அவ்வளவு சோம்பல் தன்மை மனித சமுதாயத்திற்கு உண்டாகி விட்டது! நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் இன்றியமையாதவைகளில் தொலைபேசித் தொடர்பும் ஒன்ருகும். இதன் நிர்வாகம் மத்திய அரசின் கையில் உள்ளது.

சென்னை நகரில் மட்டும் தொலைபேசிகள் லட்சக் கணக்கில் உள்ளன. சாதாரண மளிகைக் கடைக்காரர் முதல் சலூன் கடை வரையில் தொலைபேசி தொடர்பு உள்ளதை யாவரும் காணலாம். இஃதன்றி பொதுமக்கள் தொடர்பு கொள்ள, காசு போட்டு பேசும் பெட்டிகளும் நகரின் முக்கிய இடங்களில் உள்ளன.

தொலைபேசி — முக்கியமாக மருத்துவர்கள், மருத்துவ மனைகள், மருத்துவச்சிகள் (நர்ஸ்), எம்.எல்.ஏ. ஆகியோர்கட்கு இன்றியமையாததாகும். இவர்களிடம் பொதுமக்கள் தொடர்பு கொண்டு தம் தேவைகளைத் தொலைபேசியில் கேட்டு தெளிந்து கொள்ள வசதியாக இருக்கும். எனவே, தொலைபேசித் தொடர்பகங்களில் பணிபுரிவோர் பொதுமக்கள் சேவைக்கு பயன்படும் தொலைபேசி கருவிகளை அடிக்கடி கண்காணித்து

குறைகளைக் களைந்தெறிய வேண்டும். அப்படிச் செய்வதால் பொது மக்களுக்குத் தொண்டு செய்தது ஒன்று. அதே நேரத்தில் இலாகாவுக்கும் வருமானத்தை உண்டாக்கியது இரண்டு நற்பணிகள் செய்தது போலாகும்.

கடந்த ஆண்டு சென்னை செனாய்நகர் கிளப்ரோட் — எமது கிளை மருத்துவ மனைக்கு தொலைபேசித் தொடர்பு கேட்டு பொருத்தியது நமது மூலிகை மணி வாசக அன்பர்கட்குத் தெரிந்த விஷயமே! ஆனால் நம்மைப் பொறுத்தவரை தொலைபேசியினால் நோயாளிகட்கு நன்மை உண்டாகும் என்று வைத்ததற்கு மாறாகத் தொல்லைகள் தான் அதிகம் ஏற்பட்டது. இவையனைத்தும் சென்னை மூலிகை மணி வாசகர்கட்குத் தெரிந்ததே! சென்னை நகரத்தின் பல பகுதிகளிலிருந்து சனி, ஞாயிறு கிழமைகளில் மருத்துவர் வேலூரில் இருந்து வந்துவிட்டாரா? என்று கேட்க 666249 என்ற எண்ணுக்கு சுழற்றுவார்கள். மணி அடித்தால் தானே இங்கு எங்களுக்குத் தெரியும்! இந்த தொலைபேசி இல்லாமலே இருந்திருந்தால் நோயாளிகள் நேரடியாக வந்து கேட்டு உரையாடிப் போயிருப்பார்கள். இந்தக் குறைகளை ஷ இலாகாவுக்குப் பலதடவை எடுத்துச் சொல்லிப் புகார் செய்து பார்த்ததில் பயன் இல்லை. "உங்கள் தொலைபேசி சரியாகத்தான் வேலை செய்கிறது" என்ற அச்சுத்தாள் பதில் வரும். இல்லையெனில் யாராவது ஒருவர் வந்து ஏதோ செய்து, பின்பு 'இனி நன்கு வேலை செய்யும்' என்று சொல்லிப் போய்விடுவார். அதன் பிறகும் பழையபடிதான்! ஆனால் தொலைபேசிக் கட்டணம் மட்டும் மூர்ச்சை போட்டுக் கீழேவிழும் அளவுக்கு வரும். உள்ளூர் கூப்பாடு (Local Call) மட்டும் இலவசமாக அனுமதிப்பது போக 600, 500 என்று அதற்கு கட்டணத் தொகை டைப்செய்து வரும்.

வாரம் ஒரு நாள் சென்னை வந்து தங்கும்போது வெளியே இருந்து வரும் கூப்பாடுகளுக்கு (calls) பதில் சொல்லுவதற்கே நேரமில்லாத நமக்கு வெளியே டயல்செய்ய எங்கே நேரம் இருக்கிறது? இது மீட்டர் தவறு என்று கூறி, தகராறு கடிதம் எழுதினால், "மீட்டர் சரியாகவே வேலை செய்கிறது" எனவே, பில் கட்டித்தான் தீரவேண்டும்! என்று பதில் வருகிறது. இம் மாதிரி தொல்லையை சகித்துச் சகித்து வெறுப்பு ஏற்பட்டுப் பின்பு, இறுதியாக எங்களுக்கு "காசு போட்டு பேசும் தொலைபேசிப் பெட்டியாவது வைத்து" நாங்கள் பேசுவதைக் கண் காணியுங்கள் என்று எழுதிப் போட்டதற்கு பதிலே இல்லை! எம்மைப் போல் இன்னும் எத்தனைபேர் அவதிப்படுகிறார்களோ? தெரியவில்லை! எனவே சென்னை வாசக அன்பர்கள் வீணாக சென்னையில் தொலைபேசி எண் 666249-க்கு டயல் செய்யாமலே சனி, ஞாயிறு தினங்களில் நேரடியாகவே வந்து மருத்துவரிடம் தொடர்புகொள்ள கோருகிறோம்.

உ

முருகா.

மூலிகை மணியின் சார்பாக

திருத்தணிகையில் ஆண்டு தோறும் நடைபெறும்

சித்திரை முழுநிலவுப் பெருவிழாவின்

14-வது ஆண்டு விழா அழைப்பிதழ்

அருளுடைப் பெரியீர், வணக்கம். வாழி!

மூலிகை மணியின் சார்பாக ஆண்டு தோறும் நடைபெற்று வரும் 'சித்திரை முழுநிலவுப் பெருவிழா' இவ்வாண்டு சித்திரைத் திங்கள் 21, 22 ஆகிய நாட்களில் **(4, 5-5-1974)** சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் பின்கண்ட நிகழ் நிரலின்படி சிறப்பாக நடக்க இருக்கின்றது.

இவ் விழா நடத்தலின் நோக்கம் :-

- மக்கள் நோயற்று வாழ்தல் வேண்டும்.
- வந்த நோய், சொந்த நாட்டு மருத்துவத்தால் சிக்கலின்றி தீர வேண்டும்.
- தமிழ் மருத்துவம் தழைத்துச் செழிக்க வேண்டும்.
- நாடெங்கும் மூலிகைகள் வளமாக வளர வேண்டும்

என்று தணிகை வள்ளலிடம் — மூலிகை மணி வாசகர்களுடன், ஆசிரியர் குடும்பத்துடன் சேர்ந்து, 'கூட்டு வழிபாடு' நடத்துதற்கே ஆகும்.

மூலிகை மணி வாசகர்கள் தம் குடும்பத்துடன் தாராளமாக வந்து இக் 'கூட்டு வழிபாட்டில்' கலந்துகொண்டு தம் வேண்டுதல் களை, '**தணிகை முருகனிடம்**' சமர்ப்பிக்கலாம். வருகின்ற அன்பர்கள், இரண்டு நாட்கள் தங்கவும், உணவு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாசக அன்பர்களும், மருத்துவப் பயிற்சி மாணவர்களும் தவருது வந்து விழாவில் கலந்து மேன்மையுற வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

வேலூர் டாக்டர், ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.

ஆசிரியர், மூலிகை மணி

திருத்தணிகையில்

சித்திரை முழுநிலவுப் பெருவிழா 14-வது ஆண்டு

விழா நிகழ் நிரல்.

தங்கும் இடம் :

திருத்தணிகையில் வேலூரார் வணிக வைசியர் சத்திரம்
(திருக்குளத்தின் மேலண்டை பக்கம்)

நாள் : **5—5—74 ஞாயிற்றுக்கிழமை**

காலை 7-30 மணி	மூலவர் திருமுழுக்கு (அபிஷேகம்) மலைமீது
காலை 9-00 மணி	மூலிகை மணி மருத்துவப் பயிற்சி மாணவர்கட்கு ஆசிரியர் துவக்க உரை, இறைவணக்கத் துதிப்பாடல், அறவுரைகள்
காலை 11-00 மணி	மகேச்வர வழிபாடு (அடிவாரம் சத்திரத்தில்)
12-00 மணி முதல் 2-00 மணி வரை	அடியவர்கட்கு விருந்து படைத்தல்
மாலை 5-30 மணி	மலைமீது வசந்த மண்டபத்தில் பெங்களூர் பொய்க்கால்குதிரை நடனம் மன்னரும் ஜனாதிபதி பரிசு பெற்றவரும், உவது உலகத் தமிழ் மாநாட்டில் நடனம் ஆடி புகழ் பெற்றவரும், மேல் நாடுகளிலும் நமது நடனத்தை ஆடி வியத்தகு புகழ் பெற்ற, **திரு T. C. சுந்தரமூர்த்தி அவர்கள்** குழுவினரால் மயில் நடன நாட்டியமும், 'வள்ளித் திருமணம்' வில்லுப்பாட்டும் நடைபெறும்.
இரவு 10-00 மணி	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் திருவீதி உலாவும், கேடய உற்சவமும்.

குறிப்பு :— திருத்தணிகை, அரக்கோணம் புகைவண்டி சந்திப்பிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ளது. அரக்கோணம் புகைவண்டி நிலையம் இறங்கி, பேருந்து வழியாக திருத்தணிகை வரலாம்.

உ



— முன் மாதத் தொடர்ச்சி

புழுக்கள் வயிற்றிலிருந்து கழிய

பன்னீர் பூவை 50 கிராம் எடுத்து 2 குவளை நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி 1 குவளை இரவில் கொடுத்து காலையில் விளக்கெண்ணெய் கொடுக்க வயிற்றில் உள்ள பூச்சிகள் யாவும் மலத்துடன் வெளியேறும்.

(வேறு முறை)

பலாசு விதைப் பொடி 50 கிராம், பொரித்த பெருங்காயப் பொடி 25 கிராம், வறுத்து இடித்த ஓமம் பொடி 25 கிராம், வறுத்து இடித்த வாயுவிடங்கம் 25 கிராம், வெள்ளைச் சீனி 200 கிராம்,

இவைகளை நன்ருய் கலந்துக் கொண்டு 10 முதல் 20 அரிசி எடை காலை மாலை தேனில் குழைத்துக் கொடுத்துவர, இரண்டு நாள் கழித்து பேதிக்கு கொடுக்க வயிற்றில் உள்ள எந்தவித மலக்கிருமி, நாடாப்புழு, கொக்கிப்புழு உள்பட யாவும் வெளிப்பட்டுப் போகும்.

மார்பு வலிக்கு

மான்கொம்பு, செம்மரம் (அல்) செஞ்சந்தணக் கட்டை, சுக்கு, துவரம்பருப்பு, அமுக்கிரா வேர், மொச்சை இவற்றை வெந்நீர், சூடான பால் அல்லது சீமைச் சாராயம் (பிராந்தி) ஆகியவைகளில் உறைத்து மார்பு வலியுள்ள இடத்தில் பற்று இட நீங்கும்.

இஞ்சி இளகல் — (லேகிய முறை)

(1) திடமான இஞ்சி ஒன்றரை கிலோ வாங்கி வந்து தோல் சீவி பட்டணம் படியால் 6 படி தண்ணீர் விட்டு நீர்சுண்டக் காய்ச்சி நன்ருக வெந்த பின்பு இறக்கி ஆறவைத்து அம்மியில் வைத்து மைபோலரைத்து வைத்துக் கொள்ளவும்.

(2) பேரிச்சம்பழம் (விதை நீக்கியது) ½ கிலோ சிறிது நெய் விட்டு வதக்கி எடுத்து இதையும் அம்மியிலிட்டு நன்ருக அரைத்து எடுத்துக் கொள்ளவும். (3) சீனி 3 கிலோ, (4) பசுநெய் அரை லிட்டர், (5) ஏலரிசி பொடி 2 ரூபாய் எடை, (6) சுத்தமான தேன் 1 லிட்டர் ஆக யாவும் ஒன்ருகப் போட்டு நன்கு கிளறி ஒரு மண் சாடியில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

வயிற்றுக்கோளாறு, மார்பு வலி, அருசி, பசியின்மை, மலச்சிக்கல், வயிறு உப்புசம், வாய் நீரூரல், பித்த மயக்கம் ஆகியவை நீங்க காலை மாலை நெல்லிக்காய் அளவு வாயிலிட்டு சுவைத்து சாப்பிட்டு, காய்ச்சிய பசும்பால் குடிக்க வேண்டும். (தொடரும்)

சென்னையில் தொலைபேசி வைத்திருப்பவர்கட்கு ஏற்பட்ட ஒரு அனுபவம்!

தொலைபேசி மணி ஒலிக்கும்! எடுத்துக் காதில் வைத்து கேட்க மறுமுனையில் ஒன்றும் பேச்சு இருக்காது. இரண்டொரு நிமிடங்களில் மறுமுனையில் 'டக்' என்று தொடர்பு அறுந்துவிடும். பிறகு "ஹலோ" "ஹலோ" என்று நாம் கதறினுலும் பதிலே இருக்காது! இப்படி ஒரு நாளைக்கு 5 (அல்) 6 தடவை மணி அடிக்கும். இவை எல்லாம் என்ன தெரியுமா? எக்ஸ்சேஞ் ஆபீசில் நம்முடைய மீட்டரில் (Tapping) செய்து கணக்கை நம்மீது தள்ளி, வேறு ஒருவர் பேசும் (மணி ஒலி மட்டும் நமக்கு கேட்கும்)—இம் மாதிரி ஒரு நாளைக்கு 5 தடவை என்ருல் 90 நாளைக்கு 450 கால் ஆகிறதல்லவா? இதை எல்லாம் நாம் எடுத்துக் காட்ட இயலுமா? சிந்தனை செய்து பாருங்கள்!



சவுரிக் கொடி

(170-வது மூலிகை)

மரமேறும் கொடி இனத்தில் எத்தனையோ விதக் கொடிகள் உண்டு. ஆனல் சவுரிக்கொடி என்ற இந்த மூலிகையின் கொடியிலையும், பழங்களும், மரக்கிளைகளையும் பார்த்தால் பலவித வண்ணக் கலர்கள் நம்மைக் கவர்ச்சி செய்து ஈர்த்துவிடும்.

கிராம மக்கள் இந்தக் கொடியை சவுரிக் கொடி, சவுரிபழக் கொடி என்று தான் கூறுவர். தமிழ் மருத்துவ அகராதிகள் இதனை குரட்டை என்றும், பீனசக் குரட்டை, சவரி என்றும் குறிப்பிடுகின்றன.

ஏறத்தாழ கோவைக் கொடி போல் இருக்கும். இதன் பழங்கள் உருண்டையாகவும், நல்ல சிகப்பு நிறமாகவும், பழஓடு கடினமாகவும் இருக்கும். இதனை பொதுவாக காடுகளில் தான் காண முடியும். நாட்டிலும், நகர மத்தியிலும் இந்தச் சவுரிக் கொடியை காண்பதரிதாகும்.

பொதுக் குணங்கள்

சவுரிக் கொடியில் முக்கியமாக இதன் பழம், வேர் ஆக இரண்டும் மருத்துவப் பயன் உடையதாகிறது. இதன் வேர் மலத்தை உடைத்து நீராக்கித் தள்ளும். பழம் அகட்டு வாய்வகற்றும், நுட்புழுக்கொல்லி, நுரையீரல் நோயகற்றி, வெப்பகற்றி, பீனச குரட்டையைப் போக்கும். எனவே இதற்கு பீனசக்குரட்டை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர்.

பழம்

சிகப்பான இதன் பழம், தலை மண்டை சம்பந்தப்பட்ட பித்த சீதளமான எல்லாவித நோய்கட்கும் சிறப்புடையதாகும்.

முறை விபரங்கள்

(1) சவுரிப் பழத்தை நன்ருய் இடித்து போதுமான தேங்காய் எண்ணெயுடன் கலந்து காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு, காது வலிக்கும், மூக்கு, காதுகளில் உண்டாகும் புண் புரைகளுக்கு தினமும் 2 வேளை விட்டுவர அவை ஆறிவிடும்.

(2) காய்ந்த பழத்தை இடித்து சிறிது மஞ்சளும் சேர்த்து பொடி செய்து வைத்துக் கொள்ளவும். சுவாச காச (ஆஸ்துமா) இரைப்பு நோய் வந்து தொல்லை தரும்போதெல்லாம் நெருப்பனல் இட்டு அதில் மேல்படி பொடியை தூவினுல் புகை வரும்; அந்தப் புகையினை உள்ளுக்கு இழுக்க இரைப்பு (ஆஸ்துமா) நோய்கள் யாவும் உடனே ஆங்கில மாத்திரைகளைச் சாப்பிட்டது போல் நிற்கும். ஆனுல் ஆங்கில மாத்திரைகள் போல சவுரிப்பழம் கெடுதலைத் தராது! என்பதை நிச்சய மாக நம்பலாம்.

(3) சவுரிப்பழம் 4, பூலாத்திப்பழம் (இதுவும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் பழம்) நான்கும் சேர்த்து இடித்து அத்துடன் 50 கிராம் சீரகமும் போட்டு 1 லிட்டர் சுத்தமான கலப்படமில்லாத நல்லெண்ணெயும் சேர்த்து பதமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு தலைக்குத் தடவிவர தலைமுடி கருப்பாக வளரும். இந்த எண்ணெயைக் காதில் விட்டு வந்தால் காதில் வடியும் சீழ் நிற்கும்.

(4) சவுரிப்பழத்தை மட்டும் 5 எடுத்து அத்துடன் 50 கிராம் நற்சீரகத்தைச் சேர்த்துச் சிதைத்து 1 லிட்டர் நல்லெண்ணெயுடன் கலந்துக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வாரம் இரண்டு முறை தலைக்கு சூரிய உதயத்திற்கு முன்பு தேய்த்துத் தலைமுழுக நாள்பட்ட

தலைவலி, ஒற்றைத் தலைவலி, தலைபாரம், மண்டைக் குத்தல், மண்டை பீனசம் யாவும் நீங்கிப்போகும். பழத்தை உள்ளுக்குச் சாப்பிடுவதால் நஞ்சு உண்டாகும். எனவே வெளிப்பிரயோகமாக செய்வது சிறப்பு. காக்கைகளைக் கொல்ல இந்தப் பழத்தை உணவில் சோற்றுடன் கலந்து வைப்பார்கள்.

வெள்ளை ஒழுக்கு நிற்க

சவுரிக் கொடியின் வேரை இடித்து (30 கிராம்) 2 குவளை நீர் விட்டுக் காய்ச்சி குடிக்க நாள்பட்ட மலக்கட்டு நீங்குவதுடன், வெள்ளை ஒழுக்கும் நிற்கும்.

பிளவைக் கட்டிகள் நீங்க

இதன் வேரும் தும்மட்டிக்காய் வேரும் சமமாகச் சேர்த்தரைத்து ராஜபிளவைக் கட்டிகளுக்கு பற்றுபோட அவை ஆறிவிடும்.

பெண்களுக்கு காணும் வெள்ளை வெட்டைக்கு

சவுரி வேர் 50 கிராம், 200 மில்லி பசும்பாலில் போட்டுக் காய்ச்சி சிறிது சீனி சேர்த்து வடிகட்டி காலை மாலை கொடுத்துவர வெள்ளைப் போக்கு நின்று வெட்டை தணியும்.

"தலைவலி குடைச்சல் சலப் பீனசங்கள்
குலைகுலைந்து காட்டிற் குடிபோம் — நிலைவா
ணவரிப்படி மாதென் றையுறு மெய்ம்மாதே!
சவரிப் பழத்தாற் சளைந்து." (கு. மு.)

முக்கிய அறிவிப்பு!

வாசக அன்பர்கள் தங்கள் சந்தாவை புதுப்பிக்க பணம் அனுப்பும்போது M. O. கூப்பனில் பழைய சந்தா எண்ணையும் பெயர், விலாசம் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டியது அவசியம். மருந்துகள், வெளியீடுகள் பெற M. O. அனுப்புவோர்களும், தேவையானவற்றை M. O. கூப்பனிலேயே குறிப்பிட்டு எழுதிவிட்டால் தாமதமின்றிப் பெறலாம். தனிக் கடிதம் எழுத வேண்டிய அவசியமும் இல்லை!

மேலாளர் : மூலிகை மணி,

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

மூலிகை மணியின்
கடந்த ஒன்பதாண்டு மலரும், இதழ்களும்
கைவசம் சில பிரதிகளே உள்ளன.

முதல் ஆண்டு மலர்-1, இதழ்- 1, 2, 3, 4, 5, 7, 10, 11, 12
மலர்-2. இதழ்- 1, 2, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12
மூன்ருவது ஆண்டு மலர்—3, 12 மாத இதழ்களும் உள்ளன.
நான்காவது ஆண்டு மலர்—4, ,, ,,
ஐந்தாவது ஆண்டு மலர்—5, ,, ,,
ஆருவது ஆண்டு மலர்—6, ,, ,,
ஏழாவது ஆண்டு மலர்—7, ,, ,,
எட்டாவது ஆண்டு மலர்—8, ,, ,,
ஒன்பதாவது ஆண்டு மலர்—9, ,, ,,

மேலே குறிப்பிட்ட மூலிகை மணி இதழ்களில் தேவையானவற்றை குறிப்பிட்டு, ஒரு புத்தகம் விலை 50-காசு வீதம் தொகையை **M. O.** அனுப்பினுல் தபாலில் அனுப்பி வைக்கப்படும். V. P. P. கிடையாது.

மேலே குறிப்பிட்ட இதழ்கள், அனைத்தையும் ஒரே தடவையில் வாங்குபவர்கட்கு, பனிரண்டரை சதவீதம் கழிவு தரப்படும்.

☐ ஆயுள் சந்தா ரூ. 150—00 செலுத்தி, சந்தா சேருவோர்க்கு மேல்கண்ட அனைத்து இதழ்களும் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும்

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்

தபால் மூலம் பாடப் பயிற்சி — (ஓராண்டுக் கல்வி)

அநேகர் வேண்டுகோளுக்கிணங்க சித்திரை மாத முதல் மூலிகை, சித்தமருத்துவப் பாடங்கள் துவக்கப்பட இருக்கிறது. இதில் மாணவ, மாணவியர்களாகச் சேர்ந்து தபால் மூலம் பயின்று சித்த மருத்துவராகி, சேவை செய்ய ஓர் அரிய வாய்ப்பாகும். பயிற்சியின் இறுதியில் 15 நாட்களுக்கு நேர்முக வகுப்பும் — மூலிகைகளை அறிமுகம் செய்து, தேர்வு நடத்தி நற்சான்றிதழ்களை நமது மூலிகை மன்னர் கண்ணப்பர் அவர்கள் நேரில் வழங்குவார். விண்ணப்பதாரர் ரூ. 1—00 மணியார்டர் செலுத்தி, விண்ணப்ப விபரத்தாளை பெற்று மற்ற விபரங்களை அறிந்து, சேர்ந்து எளிய முறையில் உயர்ந்த மருத்துவத்தைக் கற்று மருத்துவராகப் பணி புரியலாம்.

விபரங்கட்கு :

மூலிகை மணி மருத்துவப் பயிற்சி நிலையம்,
P. B. No. 126 — வேலூர். (வ. ஆ.)

உ
முருகா

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம். சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

• • •

கே : நான் அடிக்கடி வயிற்று வலியால் கஷ்டப்படுகிறேன். மலம் கழிக்கும் போதெல்லாம் பட்டையாக ஒரு அங்குல நீளமுள்ள பூச்சிகள் வெளிப்படுகின்றன. ஆங்கில மருத்துவம் செய்து குணமில்லை. இனி ஆங்கில மருத்துவம் செய்யாமல், மூலிகை சிகிச்சையே பெறவேண்டும் என விரும்பி, "அம்மாம் பச்சரிசி" பூண்டை வேளைக்கு 2 பிடி சாப்பிட்டு பார்த்ததில் வயிற்று வலியும் நீங்கி, மலம் தாராளமாக கழிந்தது. வயிற்றுவலி சுமாராகயிருந்து வருகிறது. பூரண குணம் காண என்ன செய்யலாம்?

ப : வயிற்று வலியும் நீங்கி, மலமும் நன்கு கழிந்து, பூச்சிகளும் வெளிப்பட வேண்டுமானல், அம்மாம்பச்சரிசி கீரை மட்டும் போதாது. அத்துடன் பொடுதலைக் கீரையும், காயும் சேர்த்து விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட்டு வரவும். அத்துடன் பிரண்டைத் துவையலும், வேப்பம் பூ ரசமும் உணவில் சேர்க்க பூரண குணமாகும்.

கே : என் வயது 30. திருமணமாகி இல்வாழ்க்கையைத் தொடங்கிய நாள் முதல், நீண்டநேரம் கலவி இன்பம் அனுபவிக்க

முடிவதில்லை. விந்து விரைவில் வெளியாகிவிடுகிறது. ஆண்குறி சிறுத்தும், மீண்டும் உணர்ச்சி பெருமலும் சோர்ந்து விடுகிறது. உடல் நலமடைந்து, விந்து பலப்பட்டு, நீண்டநேர இன்பத்தை பெற என்ன வழி ?

ப : பசுமையான கீரையினங்களில் தான் இதற்கு நல்ல வழியுண்டு. இளம் வயதில் கீரைகளைக் கொண்டே சரிப்படுத்தி விடலாம். (ஆனுல் உடல்சக்தியை வீணுகப் பாழ்படுத்தியிருந்தால் மருத்துவமும் செய்துக் கொள்ளுவது அவசியம்). குறிப்பாக அரைக்கீரை, முருங்கைக் கீரை, பசலைக்கீரை, தாளிக்கீரை, தூதுவளை ஆகியன உடல்சக்தியைத் தூண்ட வல்லது. தினமும் ஒன்றை உணவுடன் நெய்விட்டுப் பகலில் சாப்பிடவேண்டும்.

கே : அஷ்டகர்ம மூலிகைகள் என்ருல் என்ன? அவைகளின் பயன் என்ன ?

இம் மூலிகைகள் யோகிகளுக்கும், சித்தர்கட்கும் பயன்படக் கூடியது. மாந்திரீக வேலைகட்கும் பயன்படும். ஜால வித்தைகளைக் காட்டவும் இதனைப் பயன்படுத்துவர். இம் மூலிகைகளால் மனிதன் நல்லவனுனல் மக்களுக்கு நன்மை செய்யலாம். தீய மனதுடையவராஞல் மற்றவர்களையும் கெடுத்துத் தானும் அழிந்து போவான்.

கே : தாங்கள் தயாரிக்கும் 'நேத்திரப் பூண்டுத் தைலம்' என்பது கண்களுக்கு உகந்தது என விளம்பர வாயிலாக அறிந்தேன். அந்த தைலத்தை உணவுக்கு முந்தியா, பிந்தியா, எப்படி, எப்பொழுது உபயோகிக்க வேண்டும் என்பதை பலரும் அறிய வேண்டி, தங்களை தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கண்களில் விட்டு வரும் நாளில், சினிமா பார்க்கலாமா? கூடாதா? மற்றும் எவை விலக்கப்படவேண்டும்? விளக்கமாக கூறவும்.

ப : 'நேத்திரப் பூண்டுத் தைலம்'—1 துளி வீதம் அதிகாலையில் கண்களில் விட்டுவர மிளகாய் பட்டது போல எரிச்சல் ஆகும். இதைத் தாங்கிக்கொள்ள வேண்டும். 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விட எரிச்சல் நீங்கும். இப்படி கண் கோளாறுகள் நீங்கும்வரை விட்டு வரலாம். இந்த தைலத்தைச் சிலர் தலை உச்சியிலும் தடவி கண் பார்வை பெற்றுள்ளதாக எழுதியுள்ளனர். மேலும் சிலர் சாப்பாட்டில் இந்த தைலத்தை நெய் போல விட்டு சாப்பிட ஒருசில கண் வியாதிகள்

நீங்கி இருக்கிறது. இதை உபயோகிக்கும் போது கண்களுக்கு அதிக வேலை தரக்கூடாது. கண்ணாடி அணியக்கூடாது. திரைப்படங்களுக்கு அறவே போகக்கூடாது. கண்ணாடி அணிவதால் இயற்கையாக பார்வை தெரிய ஆரம்பிக்கும் போது கண்ணாடி திரை மறைத்துவிடும்.

கே : ஐயா, 'திகைப்பூண்டு' என்ற ஓர் மூலிகை உள்ளதாமே! அதற்கு என்ன சக்தி உள்ளது?

ப : அதன் பெயரே — திகைப்பு! எனவே அந்தப் பூண்டை நீங்கள் காலால் மிதித்துவிட்டால் போதும்! நீங்கள் எங்கே போகிறீர்கள்; எந்த திக்கு இது? என்ற திகைப்பு ஏற்பட்டு அங்கேயே நீங்கள் சுற்றிச் சுற்றி வருவீர்கள். இப்படி அலைந்து சுற்றி வரும் உங்கள் காலில் தண்ணீர் பட்டால் தான் அந்த திகைப்பு நீங்கும்.

கே : என் மனைவிக்கு சென்ற 3 வருடங்களாக அடிக்கடி மூக்கடைப்பு ஏற்படுதலும், ஜலதோஷத்தினால் தூக்கம் கெட்டும், மூக்கில் சதை வளர்ந்து வந்தது. ஆபரேஷன் ஒரு தடவை செய்து பார்த்தேன். அது 2 மாதங்கள் வரை குணமாக இருந்தது. பிறகு இப்பொழுது மீண்டும் மூக்கடைப்பும், ஜலதோஷமும் கண்டிருக்கிறது. இதை அறவே நீக்க என்ன செய்யலாம்?

ப : அறுவைசிகிச்சை செய்தால் மீண்டும் வளரத்தான் செய்யும். பீனிச சம்பந்தப்பட்ட மூக்கடைப்பு வியாதியை குணப்படுத்துவது என்பது உள்ளுக்குத் தக்க மருந்துகளை நேரில் தேர்வு செய்து கொடுப்பதால் பூரணகுணம் கிடைக்கும். ஆனால் உபசாந்தியாக உத்தாமணி இலைச்சாற்றை மிளகுடன் ஊரவைத்து உலர்த்திப் பொடியாக்கி, அந்த மிளகுப் பொடியை மூக்கில் மெதுவாக இழுக்க மூக்கடைப்பு நீங்கும். சுவாசம் கஷ்டம் நீங்கும். இந்த பீனிசம் ஒரு சித்த மருத்துவரிடம் தான் பூரண குணமடையும்.

கே : தண்ணீரை ஐஸ் போல கட்டிவிடக்கூடிய மூலிகையும் உள்ளதா? அப்படியானால் அதன் பெயர் என்ன?

ப : தண்ணீரைக் கட்டிவிடக்கூடிய மூலிகை உண்டு. அதன் பெயர் தான் கட்டுக்கொடி. இதன் சாற்றை இடித்துப் பிழிந்து நீரில் விட்டால் நீர் கட்டியாகும்.

கே: எனது நண்பருக்குத் திருமணமாகி 2 ஆண்டுகள் கழித்து, அவர் மனைவி கருவுற்றிருக்கிருள். ஒன்பது திங்களாகி விட்டன. ஆங்கில மருத்துவரை அணுகினதில், "குழந்தையின் தலை இன்னும் திரும்பவில்லை. எனவே, பேறுகாலம் மிகவும் கஷ்ட மாகத்தான் இருக்கும்" என்று கூறினர்கள். இது தலைப்பிரசவ மாகையால், இந் நிலையில் மகப்பேறு கஷ்டமில்லாமல் அமைய, தங்கள் மருத்துவ அறிவுரைகளை நாடுகின்றேன்.

ப: அன்பரே! கவலைப்பட வேண்டாம். உமது நண்பரின் மனைவிக்கு மகப்பேறு சுகப்பிரசவமாகவே நடக்கும். ஒரு நற்செயல் புரிந்து வையுங்கள். அதாவது கீழாநெல்லி அல்லது நாயுருவி செடி எங்கே உள்ளது என்று பார்த்து வைத்துக்கொள்ளுங்கள். அதற்குத் தினமும் தண்ணீர் விட்டு வாருங்கள். பிரசவ நாளன்று சுகப்பிரசவ மாகாவிடில் ஷ செடிக்கு தூபதீபம் காட்டி எடுத்து வந்து பிரசவம் ஆகாமல் வேதனைபடும் அந்த கர்ப்பிணியின் காலில் வேரைச் சுற்றி வைக்கவும். உடனே குழந்தையின் தலை எந்தப்பக்கம் இருந்தாலும் உதயமாகி குழந்தை பிறந்து, தாயும் சேயும் நலமுடன் பிரிந்துவிடு வார்கள். இது நிச்சயம் உறுதி, உண்மை! மூலிகையை நம்புங்கள். வீணுக ஆங்கில மருத்துவர் பேச்சை நம்பி மனம் குழம்பாதீர்கள். இந்த மாதிரி பல்லாயிரக்கணக்கானவர்கட்கு செய்து, ஆபரேஷன் செய்து தான் தீரவேண்டும் என்ற கேஸ்களை கீழாநெல்லி, நாயுருவி வேர்கள் சுகப்பிரசவமாக்கியுள்ளது. அஷ்டகர்ம மூலிகைகளில் கீழா நெல்லியும் நாயுருவியும் ஒன்று. எனவே இதனை தூய்மையாக எடுத்து பேறு காலத்தில் பயன்படுத்துவது நமது கிராம மக்களின் 'பழங்கால வழக்கு. இது பற்றி முன்னதாகவே கவனிப்பாக இருக்கவும், குழந்தை பிறந்த பிறகும் அனுசரிக்க வேண்டிய முறைகளை அறிய, எமது மலிவுப் பதிப்பான 'குழந்தைப் பிணிகளும் மூலிகை மருத்துவமும்' என்னும் நூலை வாங்கிப் படித்து பயன் பெறலாம்.

ஊசி போட்டு சிறுவன் மரணம்!

தொட்டதற்கெல்லாம் ஊசியும், மாத்திரையும் ஆங்கில மருத்துவர்கள் கொடுப்பதால் வந்த விளைவு; அந்தோ பரிதாபம் பாருங்கள்! A.T.S. தடுப்பு ஊசி போட்ட பார்த்திபன் என்ற 5 வயது சிறுவன் அங்குள்ள அரசினர் மருத்துவ மனையில் இறந்து விட்டான். மூக்கில் ஏற்பட்ட சிறு காயத்திற்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு தடுப்பு ஊசி போட்டதாகத் தெரிகிறது.

— தினச்செய்தி தாள், பிப். 21

கே : ஐயா, தாயத்து என்பதும் தங்கள் மூலிகை ரட்சை என்பதும் ஒன்றுதானு? அல்லது வெவ்வேரு? இவற்றைத் தெளிவாக விளக்க வேண்டுகிறேன்.

ப : தாயத்து என்பது செம்புத் தகட்டில் சக்கரம் எழுதி அதைச் சுருட்டியோ, அல்லது சதுரமாகச் செய்தோ, குழந்தைகட்கு கட்டுவார்கள். மாந்திரீகர்கள் செய்யும் இவைகட்கு தாயத்து என்று கூறுவர். இதை பலரும் தொழிலாகச் செய்வார்கள்.

மூலிகை ரட்சை என்பது : உயிர் காக்கும் சில மூலிகைகள் உள்ளன. இவைகளை, அவரவர்கள் பிறந்த ராசி நட்சத்திரங்களுக்கு ஏற்ற மூலிகைகள் உண்டு. அவைகளைக் குறிப்பிட்ட திதி, காலங்களில் எடுத்து உபாசனுமூர்த்தி துணைகொண்டு பூசை செய்வித்து அணிதல் வேண்டும். இந்த 'மூலிகை ரட்சை' நல்ல நம்பிக்கை உள்ளவர்கட்கு நல்லவை செய்யும். கெட்ட நினைவு உடையவர்கட்கு தீய பலனைத்தான் உண்டு செய்யும். ஆக மூலிகை ரட்சை அணிபவர்களின் மனோநிலைக்கு ஏற்றபடித்தான் இயங்கும். எனவே தீய எண்ணம்; சிந்தனையுடையவர்கள் மூலிகை ரட்சையைக் கையால் தொடவும் அருகதையற்றவர்கள் ஆவார்கள்.

சிலவகை மூலிகைகளை கீரையினமாக உண்டு, நம் உடலும் மனமும் நல்லசக்தி பெறுகிறது. இதுபோல சில மூலிகைகளை பார்த்தால் மனம் அமைதி பெறுகிறது (வேப்பு, அரசு). சிலவகை மூலிகைகளை நினைத்தால் நல்லவை நிகழும் (வன்னி, வில்வம்). சில மூலிகைகளை அவரவர் ராசிக்கேற்றபடி பூசை செய்து உடம்பில் படும்படி அணிந்து இருந்தால் நல்லன நிகழும்; தீயன விலகும். இதுவே மூலிகை ரட்சையின் பலனுகும்.

கே : என் வயது 25. கடந்த 2 மாதங்களாக சளி பிடித்துக் கொண்டு, விடாமல் சளி ஒழுகிக்கொண்டு மூக்கில் இரணமும் ஏற்படுகிறது. விக்ஸ் மாத்திரை, சுடுகஞ்சியில் மஞ்சள்தூள் மருந்துகளும் சாப்பிட்டு குணம் காணவில்லை. இந்த நோய் குணம் காண என்ன செய்யலாம்?

ப : மஞ்சள் கொம்பு ஒன்று எடுத்து விளக்கெண்ணெயில் தோய்த்து எடுத்து அதை கொளுத்தினுல் புகை வரும். இந்த புகையை மூக்கின் ஒரு துளையை விரலால் மூடிக்கொண்டு வேகமாக உள்ளுக்கு இழுக்க மண்டையில் சுரீர் என்று உரைக்கும். மறு துளையை திறந்து இந்த மூக்கு துளையை மூடி அப்படியே செய்யவும். இப்படி 3, 4 நாள் செய்துவிட சளியும் நின்று இரணமும் ஆறிவிடும்.

கே : என் வயது 32. திருமணமாகாத பெண். எனக்கு இருதய துடிப்பு (பிளட் பிரஷர்) சில சமயங்களில் ஏற்பட்டு, அதிக மானதும் மயக்கமும் வருகிறது. ஏதோ ஒரு மாத இதழில், எலுமிச்சம் பழரசம் தேன் கலந்து காலையில் சாப்பிட்டால் குணம் காணலாம் என்று தாங்கள் எழுதி இருப்பதை படித்த ஞாபகம். அத்துடன் இஞ்சி சுரசமும் சேர்த்து சாப்பிடலாமா? அல்லது வேறு நல்ல முறை இருப்பின் கூறவும்?

ப : வயது 32 வரையில் திருமணமாகாத பெண் என்பதைக் கேட்க வருத்தமாகத்தான் உள்ளது. இதனால் தான் உடலில் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் உண்டாகக் காரணம். அமுக்கரவு வேர் பொடியை தினமும் காலை மாலை பாலில் சாப்பிட்டுவர இரத்த அழுத்தம் நீங்கும். நீங்கள் கூறிய முறை பயனளிக்காது. அத்துடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது நோயைக் குறைக்கும். விரைவில் திருமணம் செய்துக் கொள்ளுங்கள்.

கே : ஐயா, சென்னையிலிருந்து வெளியாகும் ஓர் வார இதழ் (இது ஓர் அக்கப்போர் பத்திரிகை; இதன் ஆசிரியர் கண்ணில்லாத கபோதி) இவர் கன்னு பின்னுவென்று மற்றவர்களைத் தாக்குவதும் தூக்குவதுமே தொழிலாகக் கொண்டவர். சில வாரங்களுக்கு முன்பு, "வேலூரிலிருந்து வெளியாகும் நாட்டு வைத்திய பத்திரிகை தாயத்து வியாபாரம் செய்து பெரும்பணம் சம்பாதிக்கிறது" என்று ஓர் வாசகர் கடிதத்தை வெளியிட்டு இருந்தது. அதன் அச்சுப் பிரதியை தங்களுக்கு இக் கேள்வியுடன் அனுப்பியிருக்கிறேன். அது தங்கள் பத்திரிகையை குறிக்கிறதா? என்பது குறித்து விளக்க வேண்டுகிறேன்.

ப : அன்புடையீர்! நாட்டில் நாலாயிரம் பத்திரிகைகள் நடமாடு கின்றன. தாங்கள் அனுப்பிய 'துண்டு பிரசுர' அச்சுப் பிரதியைப் பார்த்தேன். 'மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான்' என்கிற மாதிரி வாசகங்கள் உள்ளன. மூலிகை மணியின் பெயரையோ (அ) ஆசிரியர் பெயரையோ குறிப்பிட்டு இருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்து சாட்டையடி கொடுத்து இருக்கலாம்! கழுதைக்கு நமைச்சல் எடுத்தால் அது குட்டிச்சுவரில் போய்த் தேய்த்துக் கொள்ளும். அது போல, ஒரு சேலம் மாவட்டத்துக்காரர் எழுதியது — ஒரு வானரம் ஆசிரியர் பேரட்டு பிரசுரம் செய்துவிட்டார். (1) சேலம் மாவட்டத்

திலே ஓர் வேலூர் இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே ஓர் வேலூர். வடாற்காடு மாவட்டத்திலே இரண்டு வேலூர் — இராயவேலூர், உப்பு வேலூர் இப்படி எத்தனையோ வேலூர். (2) நாட்டு வைத்தியப் பத்திரிகை என்று எழுதியிருந்தது. ஆனல் நமது பெயர் மூலிகை மணி சித்த மருத்துவ மாத இதழ். (3) தாயத்து வியாபாரம் செய்வதாக எழுதியிருக்கிறது. நிச்சயமாக தாயத்துக்கும் மூலிகை மணிக்கும் சம்பந்தமே இல்லை! (4) அவர் எந்த வாரியாரிடம் போய் கேட்டாரோ! கோட்டக்கல் (ஆரிய வைத்தியர்) வாரியாரைக் கேட்டாரோ! அல்லது (ஆயூர்வேத பண்டிட் பி. எஸ். ராம) வாரியாரைக் கேட்டாரோ! யாருக்குத் தெரியும்! அவர்களெல்லாம் எப்படி என் சிஷ்யர் என்று சொல்லுவார்கள்? ஒருவேளை அவர்களிடம் அந்த "அக்கப்போர் பத்திரிகை ஆசிரியர்" பயின்று அதன் பின் 'நான் இயற்கை வைத்தியன்' என்று சொல்லவும்; அவர்களும் ஆமாம்! என் சிஷ்யன் தான் என்று 'அந்த' வாரியார் (வைத்தியர்கள்) சொல்லியும் இருக்கலாம். எனவே இந்த செய்தியில், நமது வாசக அன்பர்கள் நிச்சயமாக மூலிகை மணியைப் பற்றிய செய்தி என்று யாரும் நினைக்கவேண்டிய அவசியமில்லை.



தமது குருநாதர், திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகளுடன் ஆசிரியர் கண்ணப்பர், நண்பர் மு. பெருமாள்

கே : என் ஆசனவாயில் எப்பொழுதும் ஒரே அரிப்பாக இருக்கிறது. மலச்சிக்கல் கிடையாது. மலம் நன்ருக கழிகிறது. இதைப் போக்க என்ன வழி ?

ப : தினமும் காட்டுக் கருணைக்கிழங்கை புளியுடன் சமைத்து பகல் உணவுடன் 20 நாள் சேர்த்து வரவும். பிறகு உள்ள நிலையைப் பற்றி எழுதவும்.

கே : நான் ஒரு ஆண்பிள்ளை. 20 வயதுள்ள மாணவன். சிறுநீர் கழித்ததும், ஒவ்வொரு தடவையும் மர்ம ஸ்தானத்தை மேல்தோலை நீக்கி தண்ணீரால் கழுவுவது நல்லது என்று சொல்லுகிருர்களே ! இது பற்றி தங்கள் கருத்து என்ன ?

ப : ஒவ்வொரு தடவையும் தண்ணீரால் கழுவுவது சிரமம். அத்துடன் அவசியமும் இல்லை. காலையில் குளிக்கும் போது உடம்பு முழுவதும் தண்ணீரால் நனைகிறது. எனவே காது, மூக்கு, கண், கை, கால் உடம்பு தேய்க்கும் போது நீங்கள் எழுதியது போல் செய்து வந்தால் போதும்.

கே : என் வயது 29. எனக்கு இடது காலில் நரம்பு வீங்கி இருக்கிறது. வெரி கோஸ் வீன்ஸ் வீக்கம் என்று ஆஸ்பத்திரியில் கூறுகிருர்கள். நரம்பு முடிச்சு முடிச்சாக முழங்காலிருந்து கணுக்கால் வரை பின்னல் போல் சுழன்று இருக்கிறது. வலி இல்லை. கால் சற்று பருமனுக இருக்கிறது. ஆங்கில முறையில் அறுவை சிகிச்சை தவிர வேறு வழியில்லை என்று சொல்லுகிருர்கள். போக போக ஆபத்து உண்டாகும் என்றும் கூறுகிருர்கள். இதற்குத் தங்களின் மருத்துவம் என்ன ?

ப : இதற்குச் சரியான மருத்துவம் நமது "மகா மூலிகை எண்ணெய்" தான். பத்தியமிருந்து ஆண்டுக்கு 4 தடவை சாப்பிட்டு வர நரம்புப் புடைப்பு எல்லாம் நாளடைவில் நீங்கும். பொறுமையுடன் செய்தல் வேண்டும்.

கே : யானை வணங்கி என்ற மூலிகை எது ? இதன் வேறு பெயர் என்ன ?

ப : பெருநெருஞ்சில் செடிக்குத் தான் 'யானை வணங்கி' என்று பெயர். இதனை யானை நெருஞ்சில் என்றும் கூறுவர். OO

இரத்தக் காமாலை

[டாக்டர் திரு. K. G. ராஜு, R.M.P. சென்னை-1]

இரத்தக் காமாலை என்ற இந்த நோயை ஆங்கிலத்தில் 'ஹூகோமியா' என்று குறிப்பிடுகின்றனர். காமாலை நோய்களில் இது மிகக் கொடியது. உடல் வளத்தையும், பலத்தையும் பாதிப்பதோடு கண்களையும் பழுதடையச் செய்துவிடுகிறது. குறைந்த பட்சம் பார்வை சக்தியை ஓரளவாவது பாதித்து விடுகிறது.

மஞ்சட் காமாலை — நோய்களை குணமாக்குவதில் செலுத்தும் கவனத்தை விட இதில் அதிக கவனம் செலுத்தவேண்டிய நோயாகும். கண்களின் தோற்றத்தில் இரத்த நிறம்; மூத்திரத்தில் இரத்த நிறம்; மலத்தில் இரத்த நிறம்; இந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இரத்த வாந்தியெடுப்பதும் உண்டு.

இந் நோயால் பாதிக்கப்படுவோர் உணவுக் கட்டுப்பாட்டில் மிக எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

காரம், உப்பு, புளிப்பு ஆகியவற்றின் ரசதாதுக்கள் பித்த அதிகரிப்புக்குக் காரணமாகலாம். மிளகு, தூதுவளை போன்றவைகளாலும் பித்த அதிகரிப்பு ஏற்படலாம். அதிகரிக்கும் பித்தம் இரத்தத்தில் கலந்து விடுவதால் இரத்தம் தூய்மை கெட்டுவிடுகிறது. மாறுபாடான இரத்தப் பாய்ச்சலால் வியர்வை உண்டாகி தசை பாகங்கள் ஈரமாகி, வாடையிலும் நிறத்திலும் மாறுபாடு அடைகிறது.

"பித்தம் இரத்தத்துடன் கலந்துவிடுவதாலும், இரத்தத்தை அது கெடுத்து விடுவதாலும், இரத்தத்திற்குச் சமமான வாசனை—நிறம் ஆகியவற்றையடைகிறது. ஆகவே சித்தர்கள் இதற்கு 'இரத்தப் பித்தம்' என்று பெயரிட்டனர்."

திடமான உடல் உள்ளவர்களுக்கு இரத்த பித்த நோய் கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களில் ஏற்பட்டால் குணமடைய வழியுண்டு.

இந்த இரத்தப் பித்த நோயானது கொடிய (பெரிய) வியாதிகளைச் சேர்ந்தது; வீரியமுள்ளது. நெருப்பு போல் உடல் வளத்தை அழிக்கக் கூடியது. இதற்கு உடனடி சிகிச்சை இன்றியமையாதது.

இந் நோயினால் சக்தி, இரத்தச் செழுமை ஆகியவை இல்லாமை, சுவாசம், காசம், இருமல், வாந்தி வருவது போன்ற குமட்டல், ஊமத்தை போன்ற மூலிகைகளை உண்பதால் ஏற்படும் போதை போன்ற மயக்கம், பாண்டு, எரிச்சல், மூர்ச்சை, ஆகாரத்தில் அதிக வெறுப்பு, பயம், இருதயக் கோளாறுகள், தண்ணீர் தாகம், பேதியாதல், தலைவலி, துர் நாற்றமான கோழை உமிழ்தல், பசியின்மை, செரிப்பின்மை ஆகியவை ஏற்பட வழியாகும்.

சிகிச்சை முறைகள்

ஆடாதொடை, திராட்சை, கடுக்காய் மூன்றையும் இடித்துக் குடிநீராக்கி, கொஞ்சம் சர்க்கரையும் தேனும் கலந்து கொடுக்க இரத்த பித்தம், சுவாசம், காசம் ஆகியவை குணமாகும்.

பயறு, காட்டுக்கடலை, மொச்சை, துவரை இவைகளைப் பருப்பாக வும் (உண்ணத் தக்கவாறு வறுத்து) கஞ்சியாகவும் தரலாம்.

காட்டுப்புரு, வீட்டுப்புரு, முயல், மான், (பெண்மான், கவரிமான்) இவைகளின் மாமிசம் இரத்தப் பித்தத்திற்கு சிறந்த உணவு சிகிச்சை ஆகும். இந்த மாமிசங்களில் ஒன்றை நெய்விட்டுப் பொரித்து கொஞ்சம் மாதுளம் புளிப்பு அல்லது சர்க்கரை சேர்த்துத் தரலாம்.

கர்ச்சூரம், இலுப்பைப்பூ, திராட்சை, மலை வாழைப்பழம், இவை களை ஒன்றுகூட்டி, எண் மடங்கு தண்ணீர் சேர்த்துக் காய்ச்சவும். 8-ல் 1-பங்காக காய்ச்சி சுண்டியபின் இறக்கி வடிகட்டி, போதுமான சர்க்கரை சேர்த்துத் தரலாம்.

பொரி மாவில் கொஞ்சம் நெய்யும், தேனும் கலந்துத் தரலாம்.

குருவேர், சிவப்புச் சந்தனம், வெட்டிவேர், கோரைக் கிழங்கு, பற்பாடகம் இவைகளைக் குடிநீரிட்டு வடிகட்டித் தர தாகம், வரட்சி குணமாகும்.

இரத்தப் பித்தத்தால் பாதிக்கப்படுவோர், பொதுவாக மலசுத்திக் காகவும், சிறுநீர் சுத்திக்காகவும், மணித்தக்காளியையும், யானை நெருஞ்சிலையும் பயன்படுத்துதல் நலமாகும். மணித்தக்காளியின் சாறு உ, மூன்று பாலாடை அளவு வெறும் வயிற்றில் சாப்பிடலாம். யானை நெருஞ்சில் முள்ளை அல்லது சமூலத்தை குடிநீரிட்டுக் குடிக்கலாம். மணித்தக்காளியின் சாறு மலசுத்தியையும், யானைநெருஞ்சில் குடிநீர் சிறுநீர் தூய்மையையும் உண்டாக்கும்.

○ ○ ○

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

கடற் கோஞ்சி

வேறு பெயர்கள் :— கடல் கெஞ்சி, ஆங்கிலம் : ஹனி புஷ், காஸ்மெடிக் பாக்ஸ், தெலுங்கு : நாக கொளாங்கா, மலையாளம் : காட்டுக் கொஞ்சி, சமஸ்கிருதம் : ஏகாங்கி, இந்தி : பிப்சார் கூண்டி.

விபரம்

இது செடியினத்தைச் சார்ந்தது. தென்னிந்தியாவுக்கே உரிய மூலிகையானாலும் இலங்கை, வங்காளம், இமயமலைப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் பயிராகின்றது. குத்துச் செடியினமாக வளரும்.

உபயோக உறுப்புக்கள்—இலை, பூ, பட்டை

சுவை : கைப்பு, துவர்ப்பு, விர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

உடல் உரமாக்கி, மணமூட்டி, பசித்தூண்டி, குளிர்ச்சியுண்டாக்கி.

கோடிக் காக்கட்டான் விதை

வேறு பெயர்கள் :— கொடிக் காக்கணம் விதை, ஜிரிகி விதை, கொடிக் காக்கட்டான் விதை, ஆங்கிலம் : ஐபோமியா ஐட்ராசியா, காலடஞசிட்ஸ், தெலுங்கு : ஜிரிகி வித்துலு, கொள்ளி வித்துலு, கன்னடம் : கௌரிபிஜா, சமஸ்கிருதம் : ஹப்பன்நில், இந்தி : காலா தனைஷ்.

விபரம்

தமிழகத்தின் சிறப்புமிக்க கொடிக் காக்கணம் விதையினமாகும். இதில் வெள்ளையினம், சிகப்பு இனம் என்று இரண்டு இனமாகும். இதன் பூக்கள் இறைவணக்கத்திற்கு உரியனவாகும்.

உபயோக உறுப்பு—உலர்ந்த விதைகள்.

சுவை : இனிப்பு, புளிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணாதிசயம்

பெருமலம் போக்கி, புழுவகற்றி, நுட்புழுக்கொல்லி, மலநீராக்கி.

கோடி வேலி

வேறு பெயர்கள் :—அணிஞ்சில், அதிகநாரி, அழல், அதிபதுங்கி, உதாசனன், எழுநா, எரி, ஒலி, கருநாகம், கனலி, காரிமை, கொடுவேலி, காளிலிந்திரன், கொடிச்சி, காளிலம், சித்திரம், சித்திரமூலம், சித்தர் மூலம், சித்தர்மூலி, ஞெகிழி, தழல் திக்கு, திசைநா, வன்னி, வஞ்ச தாரம், வன்னி, அக்னி, அதிகனசி, உதகவன், சித்திரகம், தபனள், வசகம், திகனு, வனமா, கொடிவன்னி, வன்னி பரியம், வலி வன்னி, சித்ரகம், திவிபிநாமம் ஆகியன.

கொடி வேலியில் 3 விதமுண்டு

1) வெண் கொடி வேலி, 2) செங் கொடி வேலி,
3) கருங் கொடி வேலி.

இவைகளின் மருத்துவக் குணம் ஒன்றே.

1) வெண் கொடி வேலி

வேறு பெயர்கள் :— வெண் சித்தர் மூலம், வெண் கொடி மூலம், ஆங்கிலம் : சிலோன் லெட்வார்ட், தெலுங்கு : தெல்ல சித்ர மூலம், அக்னிமாட்டா, மலேயாளம் : தும்ப கொடுவேலி, சமஸ்கிருதம் : சித்ரகா விருட்சா, உருது : சிட்டராஜ், இந்தி : சிட்ரா.

விபரம்

பெரும்பாலும் இது குத்துச் செடியாக வளரும். காடு, புதர் வேலிகளில் வளரக்கூடியது. ஒற்றை மல்லிகைப் போல வெள்ளை நிறமாக பூக்கும்.

உபயோக உறுப்பு—அடி வேர் மட்டும்.

சுவை : கார்ப்பு, விறுவிறுப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்


வியர்வை உண்டாக்கி, முறைவெப்பகற்றி, மலமிளக்கி, வாய்வகற்றி.

(தொடரும்)

மூல நோயால்

துன்பப் படுகிறீர்களா?

தற்காலம் ஆங்கில மருத்துவத்தில் மூல நோய்க்கு அறுவை சிகிச்சைகளைச் செய்து, மேலும் நோயை அதிகப் படுத்திக்கொண்டு துன்பப் படுபவர்கள், அதனை விடுத்து கீழ்க்காணும் முறைப்படி, சித்த மருத்துவத்தில் எளிய மூலிகை முறைகளைக் கையாண்டு, நோயை அறவே ஒழித்து பூரண குணம் காணலாம்.



தூதுவளை வேர்,

மருட்கிழங்கு,

கருணைக்கிழங்கு,

பிரண்டை வேர்,

நல்ல ஆரை,

காட்டுக் கருணைக்கிழங்கு,

அறுகங்கட்டை, நீர்முள்ளி வேர்

இவைகளை சம அளவு எடுத்து உலர்த்தி தனித் தனியாக இடித்துத் தூள் செய்து கலந்து வைத்துக்கொண்டு, தினமும் மூன்று விரற்கடை அளவு தேனில் குழைத்து காலை, மாலை இரு வேளையாக 40-நாள் சாப்பிட்டுவர எல்லாவித மூலநோய் களும் ஆச்சர்யப்படும் வகையில் அகன்றுவிடும்.

இச்சா பத்தியமிருப்பது அவசியம்.

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர். இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 2—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3—00 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4—00 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மணி மொழிகள் !

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே !

நீ உண்பது பசியை நீக்குவதற்கு மட்டுமன்று ; பசியாறுவதுடன் அந்த உணவினால் உடம்புக்கு வலிமையும், உளத்திற்கு நற்பண்பும் நற்குணமும் உண்டாக வேண்டும். உணவினால்தான் நற்குணங்கள் எய்துகின்றன. ஆகார நியமம் மிக அவசியமானது. அறிவையும் அன்பையும் கெடுக்கக் கூடிய ஆகாரத்தை அருந்தாதே. தூய உணவை யுண்டு, தூய குணங்களை வளர்த்துக்கொள்.

உனது மனைவி மக்களுக்கு நிரம்ப வேண்டும் என்று பொய்யும் வஞ்சனையும் செய்து பொருளைத் தேடாதே. அப்படித் தேடுவதனால், நீ தேடிய பொருள் மனைவி மக்களை யடைந்து தீமை விளைவிக்கின்றது. அதனால் வரும் பாவ மூட்டை உன் உயிருடன் தொடர்ந்து வருகின்றது. உடம்புக்கு சில ஆண்டுகள் தொடர்பு படும் மனைவி மக்களுக்காகத் தீயவழியில் பொருளை ஈட்டி வைத்துவிட்டு, நீ கணக்கற்ற பாவத்தை சுமந்து கொண்டு போவது எத்துணைப் பெரிய மடமை ? எண்ணிப் பார். அறநெறியில் பொருளை ஈட்டு.

சொல்வதனால் குறைந்து போகும் பொருள்கள் இரண்டு ; அவைகளாவன : புண்ணியமும் பாவமுமாகும். நீ செய்த புண்ணியங்களை — தருமங்களை நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும்.

நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும்.

குறைய வேண்டியது பாவம் ; நிறையவேண்டியது புண்ணியம்.

ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே ; பாவத்தைக் கூறு.

அனுபவம் உணர்த்தும் உண்மை

ஏ. பாலசுப்ரமணியம், B. A,
Asst. Regional Director.
National Savings

33-C, வேணுவன
குமரர் கோவில் தெரு,
திருநெல்வேலி-6.

மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய டாக்டர் அவர்களுக்கு,

வணக்கம். நான் தங்கள் "மூலிகை மணி" இதழ்களை தவருமல் படித்து, அதில் ஒரு சிலவற்றை தயார் செய்து, நானும் என் குடும்பத்தாரும், மற்றும் நண்பர்களும் நல்ல பலன் அடைந்து வருகிறோம். அதற்கு தங்களுக்கு எங்களுடைய நன்றி!

◎ 'மேனி பற்பொடி' என் தங்கைக்கு இருந்த ஈறு தொந்தரவுகளை நிவர்த்தி செய்தது.

◎ 'கடுக்காய் ஊரல்' என் தகப்பனர் அவர்கட்கு (71 வயது) நல்ல டானிக்காகவும், மூலத் தொந்தரவு உள்ள என் உறவினர்களுக்கு நல் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

◎ சுக்கு, கடுக்காய், காசிக்கட்டி, இந்துப்பு பற்பொடி தான் நாங்கள் எல்லோரும் உபயோகித்து வருகிறோம்.

◎ தங்களின் அரிய தயாரிப்பான 'நேத்திரப் பூண்டு தைலம்' என் இரண்டாவது பெண்ணுக்கிருந்த கண் நோயை நிவர்த்தி செய்தது.

◎ என் மனைவிக்கு பனிகாலத்தில் மூச்சுத்திணறல் சமயத்தில் சிறுகுறிஞ்சான் வேர், சுக்கு, மிளகு, திப்பிலி சூரணம் கொடுத்ததில் நல்ல பலன் கிடைத்தது.

தங்கள் புத்தகங்களைப் படித்ததினுல் தான் இவை போன்ற பல சித்த மருத்துவ முறைகளை (மருந்து) நாங்களே தயார் செய்து நன்மை அடைந்து வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தங்களுக்கு தெரியபடுத்துகிறேன்.

மூலிகை ரட்சையினால் பயனடைந்த அன்பர்களின் கடிதங்கள்:

பி. எஸ். நாராயண நாயர், இராஜபாளையம்.

அன்புமிக்க வணக்கத்துக்குரிய மருத்துவர் அவர்களுக்கு பி.எஸ். நாயர் எழுதும் கடிதம், தாங்கள் அன்புடன் அனுப்பிய மூலிகை ரட்சையைப் பெற்றுக்கொண்டேன். அதை தாங்கள் சொற்படி அணிந்து மனநிறைவும், சில கெடுதல்கள் நீங்கி நன்மையும் உண்டாயிற்று. என் ஊரிலும் சிலரிடம் சொல்லி மூலிகை மணியின் சந்தாதாரராகச் சேர்க்க முயற்சி செய்து வருகிறேன். வேலை செய்யும் இடத்தில் குற்றம் சொல்லி கெடுக்கும் எண்ணமுள்ளவர்கள் குறைந்துள்ளனர். எல்லாம் தங்கள் அன்பாலும், முருகன் அருளாலும் வந்தது என்று மகிழ்ச்சி அடைகிறேன்.

வி. முனியாண்டி, கதர் விற்பனை நிலையம், கம்பம்.

ஐயா, தங்களிடம் மூலிகை ரட்சை வாங்கி கட்டி முருகனருளால் எனக்கு பல நன்மைகள் உண்டாயிற்று. குதிரை வண்டியில் விபத்து ஏற்பட்டு, புத்தி பேதலித்து மாருட்டம் அடைந்து ரட்சை அணிந்த பிறகு மாருட்டம் நீங்கி மன அமைதியுடனும், நிறைவுடனும் இருக்கிறேன்.

கோ. புருடோத்தமன், சென்னை-12

தாங்கள் முருக உபாசனை செய்து எனக்காக அனுப்பிய மூலிகை ரட்சையை தபால் வழி பெற்றுக்கொண்டேன். அந்த ரட்சையை அணிந்ததும் அளவிலா உவகை அடைந்தேன்.

ஆர். பாலசுப்பிரமணியன், ராமசாமி லஞ்ச் ஹோம், ஸ்ரீவைகுண்டம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய அருகம்புல் ரட்சை அணிந்து உள்ளேன். இதன் உதவியால் மகத்தான சாதனை புரிந்துள்ளேன். அன்புடன் அனுப்பி உதவியதற்கு மிக்க நன்றி.

வி. சேதுராமன், கணேஷ் ஹார்டுவேர் மார்ட், சீர்காழி.

மதிப்பிற்குரிய மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர் அவர்களுக்கு தங்களின் மூலிகை ரட்சையைக் கட்டி நிம்மதி கிடைத்து, உடல்பிணியும் குறைந்து, வியாபாரமும் கொஞ்சம் முன்னேற்றத்தில் உள்ளது. சித்ரா பௌர்ணமி ஸ்ரீ முருகப்பெருமான் விபூதி அனுப்பவும்.

பி. எம். திருமலைசாமி கவுண்டர், 20-எ, ஆறுமுக செட்டியார் விதி, பொள்ளாச்சி.

தங்களின் மூலிகை ரட்சையை பெற்று அணிந்துகொண்டேன். இதை அணிவதற்கு முன்னர் எந்தக் காரியத்திலும் தடங்கல், மன அமைதியின்மையால் வேதனை அடைவேன். ரட்சை வந்தபின், மனம் அமைதியாய் உள்ளது. மனோ அமைதிக்கு மூலிகை ரட்சைதான் காரணம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

கே. என். கிருஷ்ணன், வடக்கு சித்திரை விதி, ஸ்ரீரங்கம்.

அன்புள்ள ஐயா, தாங்கள் அனுப்பிய ரட்சை அணிவித்தபிறகு என் மனைவியின் சித்தப்பிரமை குணம் ஆகியிருக்கிறது. அதை உங்களுக்கு முன்பே எழுதியுள்ளேன். எல்லாம் வல்ல திருமுருகன் அருளாலும், தங்கள் ஆசியாலும் குணமடைந்தமைக்கு குமரக் கடவுளை வேண்டுகிறேன்.

இரா. துரையரசன்,

தண்டமிழ் மருத்துவரே! தமிழ் மக்களுக்கு தமிழ் உணர்ச்சி வராதா? தமிழகம் தன்னரசு பெருதா? தமிழ் மருத்துவம் தன்னிடத்தை அடையாதா? வரும்! பெறும்! அடையும்! என்று நான் நம்புவது உண்டு. நிற்க கருப்பை புற்று நோயினுல் வருந்தின என் அன்பு அம்மையாருக்கு தாங்கள் அனுப்பிய மூலிகை ரட்சை அளப்பரிய பயன் தருகின்றது.

க. பரஞ்சோதி, தமிழ்நாடு சர்வோதய சங்கம், திருப்பூர்.

அருளுளம் படைத்த ஐயா, தாங்கள் அனுப்பிய மூலிகை ரட்சையும், அருட்பிரசாதங்களும் கிடைக்கப் பெற்றேன். திருநாவுக்கரசின் அரைஞாணில் செருகி அணிவித்தேன். மிளகு சூரணமும், அன்னபேதியும் கடுகளவு பசும்பாலில் உள்ளுக்குக் கொடுத்தேன். இதுவரை படுத்தபடி இருந்த குழந்தை வருவோர் போவோரை எல்லாம் நன்ருக பார்க்கிருன். எங்கள் உள்ளம் மலர்ந்தது. இந்த ஒப்பற்ற பேருளை அடியேன் பால் ஈந்த சித்தர் தாங்கள் நீண்டநாள் வாழ்க!

அவுல்தார் முத்து, ஜபல்பூர்.

தாங்கள் அனுப்பிய மூலிகை ரட்டை கிடைத்தது. அணிந்த அன்றே எனது நண்பருக்கும் எனக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு நட்பு முறிந்து விட்டது. என்ருலும் நான் மனம்சலியாமல் தாங்கள் எழுதியது போல் பிரதி வெள்ளிக்கிழமையும் தூபம் போட்டு அணிந்து வருகிறேன். 2 மாதம் கழித்து அந்த நண்பர் எனக்கு பயங்கர விளைவுகளை தரும் செய்கையில் ஈடுபட்டு இருந்ததாக தெரியவந்தது. தங்கட்கு என் நன்றி கலந்த வணக்கம்.

MOOLIGAI MANI Regd. No. M. 8354

இதய ஒலி!

ப. சங்கரலிங்கம், பி. ஏ., 17—3—74
திருநெல்வேலி டவுன்.

அன்புடையீர்! வணக்கம். திருநெல்வேலியில் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிரசங்கம் நடந்தது. அதுசமயம் மூலிகை மணி பற்றியும், தாங்கள் செய்து வரும் மூலிகைத் தொண்டு பற்றியும் அவர் மிகவும் பெருமையாகப் பேசினார். அதோடு பத்தாண்டுகளுக்கு முன்பு 'மூலிகை மணி' யை அவரது கரத்தால் துவங்கிக் கொடுத்ததாயும் சொன்னார். இப்படி ஓர் அரிய வாய்ப்பை பெற்று தாங்கள் அவருக்கு சீடராகியதால் தான், மூலிகை மணியின் மூலம் தமிழ் நாட்டிற்கு மூலிகைத் தொண்டு செய்ய முடிந்தது என்று நம்புகிறோம் அண்மையில் தங்கள் மகன் தமிழ்த் திருமணம் கிருபானந்தவாரியார் சுவாமிகளின் தலைமையில் நடைபெற்றதை மூலிகை மணி வாயிலாக கண்டு களித்தோம். வாழ்க மணமக்கள் பல்லாண்டு!

இங்ஙனம், ப. சங்கரலிங்கம், பி.ஏ.,

ச. கிருஷ்ணமூர்த்தி, 28—2—74
பரங்கிப்பேட்டை.

மேன்மை தங்கிய ஐயா அவர்கட்கு, தங்கள் அன்பும் ஆசியும் மறவாத சிஷ்யன் ச. கிருஷ்ணமூர்த்தி பணிவுடன் எழுதும் மடல், நலம்; தங்கள் நலனுக்கும் பணிக்கும் இறையருள் கிருபை செய்யுமாகவும். தங்களது அருட்பெரும் மருந்தான "நேத்திரப் பூண்டுத் தைலம்" கண் தெரியாத இருவருக்கு ஒரு வாரம் தொடர்ந்து போட்டு வந்ததில் நல்ல பயனளித்துள்ளது. கண் ஓரளவு எதிரில், அருகில் இருக்கும் பொருள், உருவம் தெரிகிறது. அந்த கண்களில் ஒளிகொடுத்த உத்தமரான தங்கட்கு அந்த இருவரின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஏழை சிஷ்யனை மறந்துவிட வேண்டாம் என்று வேண்டுகிறேன். இப்படிக்கு, ச. கிருஷ்ணமூர்த்தி

Saint Jean Simon, 18—2—74
பாண்டிச்சேரி-7.

தாங்கள் ஆத்மசுத்தியோடு செய்யும் மருத்துவச் செயல்கள் எவ்வளவோ நபர்களை தங்கள் பால் ஈர்க்கச் செய்து வருகிறது. அப்படி கவரப்பட்டவர்களில் நானும் ஒருவன். தங்களின் அரிய பெரிய கருத்துகளை ஊன்றி கவனிக்கவே தங்களிடம் நான் ஒரு சந்தாதாரனாக இருந்து வருகிறேன்.

இப்படிக்கு, **Saint Jean Simon**

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் வேலூர் மருத்துவர் ஆ. ரா. கண்ணப்பர், 59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (வ. ஆ.)